# தொல்லியல் ஆய்வுகளும் பழந்தமிழர் நிலவியல் அடையாளங்களும்

**தே. ரெம்யா**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

**முனைவர் தே. பெனினா**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வு மையம்
முஸ்லிம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

## முன்னுரை

ஒரு நாட்டின் நிலமும் வளமும் முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு அம்சங்களாக கருதப்படுகின்றன. நிலத்திற்கென்று நிலைத்த தன்மை கிடையாது. மன்னர்களின் படையெடுப்புகள் வாயிலாகவும், ஆட்சி மாற்றத்தின் காரணமாகவும், நிலவியல் எல்லைகள் மாறுபடுவ துண்டு. ஆழிப்பேரலைகள், கடற்கோள், நிலநடுக்கம் போன்ற இயற்கை சீற்றங்களாலும் நிலவியல் மாற்றங்கள் ஏற்படுவதுண்டு. ஒரு நாட்டில் வாழும் மக்களின் இயல்பையும், அவர்கள் பேசும் மொழியையும், அடிப்படையாககொண்டு நாட்டின் எல்லைகள் வரையறுக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

## நிலவியல் மாற்றங்கள்

தமிழ்நிலம் என்று அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் நிலப்பரப்பு, திணைகளாக பிரிக்கப்பட்டிருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது. அத்திணைக் கோட்பாடு சூழலியலை அழப்படையாகக்கொண்டு பிரிக்கப்பட்டிருந்ததைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக உறுதிப்படுத்த முடிகிறது. ஒரு சமூகம் வாழ்ந்த நிலவியல் வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது. கால மாற்றத்தால் சில இடங்கள் புதிதாக உருவாகலாம் சில இடங்கள் அழிவுறலாம். அழிவுற்ற இடங்களில் வாழ்ந்த அந்நிலத்தின் பூர்வீகக் குடிகளும் ஒன்று பட்டவர்களாகவோ அல்லது வேறுபட்டவர்களாகவோ இருக்கலாம். அழிந்துபோன இனக்குழுவின் வரலாற்றையும் தொன்மங்களையும் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகம் தேடிக் கண்டறிந்து தன் தொன்மையை நிலைநாட்டிக் கொள்ளும் வழக்கமும் காணப்படுகிறது. உலகம் முழுவதிலும், அவ்வாறான முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருவதை இதற்கு சான்றாகக் கொள்ளலாம்.

### அகழாய்வு

உலகத்தின் பல பகுதிகளில் வாழ்ந்த பண்டைய மக்கள் தனித்தும் பிறரோடு கலந்தும் பலவகை நாகரிகங்களையும், பண்பாட்டையும் வளர்த்து வந்தனர். கற்கால மக்கள்செம்மைப்பயன்படுத்தத்தொடங்கியதும் கல்லால் செய்யப்பட்ட பல பொருள்களைப் புறக்கணித்து விட்டனர். பயன் இல்லாத மண்பாண்டங்களை விலக்கினர். இப்போது நீக்கப்பட்ட அப்பொருள்கள் கவனிப்பு இல்லாமல் நாளடைவில் மண்ணுக்குள் புதையுண்டன.

பண்டைய மக்கள் நல்லிடங்களைத் தேடி அடிக்கடி இடம் மாறித் திரிந்தனர். அதனால் ஆங்காங்கு பழுது அடைந்த பொருட்களை விட்டுச் சென்றனர். அப்பொருள்கள் நாளடைவில் மண்ணுக்குள் புதைந்தன. ஆற்றங்கரை ஓரத்திலும், கடற்கரை ஓரத்திலும் வாழ்ந்த மக்கள் இயற்கை சீற்றத்திற்கு அஞ்சி இடம் பெயர்ந்தனர். இயற்கைச் சீற்றத்தாலும் வேறு பிற காரணங்களினாலும் மக்கள் பயன்படுத்தியவை மண்ணுக்குள் மறைந்தன் ஆற்றின் அடியில் புதையுண்டன்சமவெளிகளில் மண்மேட்டினுள் புதைந்தன. அவ்வாறு புதைந்து கிடப்ப வற்றைக் கண்டறிய மண் கோடிட்ட இடங்களைத் தோண்டி அகழாய்வு மேற்கொண்டனர்.

அவ்விடங்களில் காணப்பட்ட பலதரப் பட்ட பொருட்களை ஆய்வுக்கு உட்படுத்தினர் அவற்றைப் பற்றிய உண்மை நிலையையும், அவற்றைப் பயன்படுத்தி மக்களின் முறைமையையும் பற்றி அறிய முயன்றனர். இத்தகைய முயற்சியே அகழ்வராய்ச்சி எனப்பட்டது.

### அகழ்வராய்ச்சிகளின் பயன்

அகழ்வராய்ச்சியின் வாயிலாக உண்மைச் செய்திகளையும், அவற்றை பயன்படுத்திய பண்டைய மக்களைப் பற்றிய செய்திகளையும் அறிந்துகொள்ள முடியும். அகழ்வராய்ச்சியின் அடிப்படையில் தொல்பழங்கால மக்களின் பயன்பாட்டுக் கூறுகளான வாழ்க்கை முறை, நம்பிக்கை, சடங்கு, வழிபாடு, பேசிய மொழி, கலையார்வம் முதலியவற்றையும் தெரிந்து கொள்ளலாம்.

### சிந்து சமவெளி தொல்லியல் ஆய்வும் தமிழர் நாகரிகமும்

1922 ஆம் ஆண்டு இந்தியத் தொல்லியல் துறையினரால் சிந்து மாநிலத்தின் மொகஞ்ச தாரோ என்னும் இடத்திலிருந்த பெரிய மண் மேட்டில் தோண்டி அகழ்வராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் வாயிலாக அங்கு மண்ணுக்கு அடியில் அழகிய நகரம் புதைந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதே போல் மேற்குப் பஞ்சாப் மாநிலத்தில் ஹரப்பா எனும் நகரம் புதைந்து கிடப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்விடங்களில் தொடர்ந்து அகழ்வராய்ச்சி நடத்தி மண்ணுக்கு அடியில் புதைந்துகிடந்த இந்த இரு நகரங்களைப் பற்றிய செய்திகளை உலகறியச் செய்தவர் தொல்பொருள் ஆய்வியல் அறிஞர் சா.ஜான் மார்ஷல் என்பவர். இப்புதையுண்ட நகரங்களைப் பற்றிய செய்திகளின் தொகுப்பு பிற்காலத்தில் சிந்து சமவெளி நாகரிகம், ஹரப்பா பண்பாடு என்ற தலைப்புகளில் அறியப் படலாயின. தமிழர்களின் தொன்மை வரலாற்றை அறிய சிந்து சமவெளி மொகஞ்ச தாரோ பகுதிகளில் நடத்தப்பட்ட அகழாய்வுகளின் முடிவுகள் முதன்மைச் சான்றுகளாக பயன்படுகின்றன.

### சிந்து சமவெளி நாகரிகமும், தமிழர்களும்

சிந்து சமவெளி நாகரிகத்தை திராவிடர் நாகரிகம் என்று கூறுவதற்கு அங்கு தோண்டி எடுக்கப்பட்ட பொருட்களும், வெளிப்பட்ட கட்டட அமைப்பும்,

பயன்படுத்திய நாணயங்களும் சான்றாக அமைகின்றன. தொல்லியல் அறிஞரான ஐராவதம் மகாதேவன், மொகஞ்சதாரோ, முத்திரைகளில் பொறிக்கப் பட்டுள்ள எழுத்துக்கள், தமிழப் பிராமி எழுத்துக்களை ஒத்திருப்பதாகக் குறிப்பிடுகிறார். மேலும், அங்கு கிடைத்துள்ள தகவல்கள் எந்த வகையில் தமிழோடும், தமிழர்களோடும் தொடர்புடையவை என்பதையும் ஆய்வுகள் மூலம் அவர் நிறுவியுள்ளார். அவரது குறிப்புகள் சிந்து சமவெளி மற்றும் மொகஞ்சதாரோ பகுதிகளில் மேற் கொள்ளப்பட்ட அகழாய்வுத் தடயங்கள் தமிழர்களின் தொன்மைக்கு சான்றாக அமைவதை உறுதிப்படுத்துகிறது. **(எச். ஆர் ஹால் கிழக்கின் தொன்மை வரலாறு, ப.90)**

## தமிழகத்தில் தொல்லியல் ஆய்வுகள்

ஒரு சமூகத்தின் புதைந்துபோன வரலாறுகளை மீட்டெடுக்கவும் ஆய்வு மேற்கொள்ளவும் அகழாய்வுகள் அல்லது தொல்லியல் ஆய்வுகள் பயன்படுகின்றன. தமிழகத்தில் நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகளைக்கொண்டு கடந்த 2000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர்களைப் பற்றியும் அவர்தம் வாழ்வியலைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது.

தமிழகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் தொல்லியல் அகழாய்வுகள் நடத்தப்பட்டு உள்ளன. தமிழகத்தில் அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர், பொருந்தாள் (பழனி), காவிரிப்பூம்பட்டினம், அழகன் குளம், கொடுமணல், கொற்கை, கோவலன் பொட்டல் (மதுரை), கரூர், மான்குடி, திருத்தங்கல், மாங்குளம், கீழடி போன்ற பகுதிகளில் நடைபெற்ற அகழாய்வுகள் தமிழ் நிலத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும், குறித்த புரிதலை ஏற்படுத்துகின்றன. இந்த அகழாய்வுத் தளங்கள்பழங்காலத்தில்தொடங்கிஇடைக் காலம் வரையான பண்பாட்டு நிரலை வெளிப்படுத்தி உள்ளன. இந்தத் தளங்கள் மலை அடிவாரம், ஆற்றங்கரைகள், கடற் கரை ஆகிய பகுதிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ளன. எஞ்சிய தளங்கள் இரும்புக் காலம், தொடக்க வரலாற்றுக்காலம் ஆகிய காலங்களைச் சார்ந்தவையாக அறியப்படுகிறது. இத்தகைய அகழாய்வுகளில் சேகரிக்கப் பட்டத் தடயங்கள் கால வரை யறைகளைத் தீர்மானிக்க உதவுகின்றன.

## ஆதிச்சநல்லூர்

அகழாய்வு செய்யப்பட்ட இரும்புக் காலத் தளங்களில் ஆதிச்சநல்லூர் அகழாய்வு சிறப்பு வாய்ந்தது. தூத்துக்குடி, திருநெல்வேலி, ராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் சுற்றுப் பகுதிகள் கற்கால ஊழியான தொல் பழமையான இடத்தைப் பெற்றிருக்கின்றன. சிறப்பாக தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகியவற்றின் சுற்றுலாப் பகுதிகள் நுண்கற்காலத்து மாந்தர் வாழ்விடங்களின் சான்றெச்சங்களைக் கொண்டுள்ளன. அங்கு நுண்கல வகையைச் சார்ந்த கற்கருவிகளை உள்ளிணைத்த மணற்குன்றுகள் உள்ளன. அக்கருவிகள் செம்பட்டைக்கல், படிமக்கல், சூதுப்பவளம், படிகக்கல் மற்றும் கல்மம் ஆகிய குறைமணி கற்களால் ஆனவை. இவ்வகைக் கற்கருவிகள் இப்பகுதியில் மட்டுமே காணப்படுவதாகத் தொல்லியல் ஆய்வாளர் காமராசு குறிப்பிடுகிறார். அவை பொதுக் கால கணக்கீட்டிற்கு முந்தைய (BCE) 12,000 முதல் 10,000 வரையிலான காலத்தை சேர்ந்தவையாக இருக்கலாம் என்று அவர் கணிக்கிறார். இக்குறிப்புகள் மூலம் சுமார் 150 ஆண்டுகளாகத் தமிழகத்தில் நடைபெற்று வரும் தொல்லியல் ஆய்வுகள் வெவ்வேறு கால புதைப் பொருட்களை அடையாளப்படுத்தி இருப்பதால் வரலாறு அறியப்பட்ட முன் கற்காலம் முதல் தமிழ் சமூகம் வாழ்ந்து வருவதை உறுதிப்படுத்த முடிகிறது. (காமராசு. ஆதிச்சநல்லூர் ஆய்வுகள் ப. 55.

தமிழகத்தில நடைபெற்ற அகழாய்வில் காலத்தால் முந்தையது ஆதிச்சநல்லூர் அகழாய்வே ஆகும். ஆதிச்சநல்லூரை அகழாய்வுத்தளமாகக்கொண்டு வெவ்வேறு காலகட்டத்தில் மத்திய, மாநில தொல்லியல் துறை சார்பில் பலகட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதை தொல்லியல் துறை வெளியீடு மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

தொல்லியல் அகழாய்வுகள் ஆதிச்சநல்லூர் புதைத் தளத்தில் 1876, 1899, 1903, 1904 மற்றும் 1906 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்டுள்ளன. பின்னர் 1914-ஆம் ஆண்டு அயல் நாட்டவர் தொல்லியல் அகழாய்வுகளை நடத்தினர். அண்மையில் இந்திய தொல்லியல் அளவீட்டு துறை இத்தளத்தில் 2004 மற்றும் 2005-ஆம் ஆண்டுகளில் அகழாய்வுகளை நடத்தியது. 1914-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட அகழாய்வின் போது 9000-க்கும் அதிகமான தொல்பொருள்கள்கண்டுபிடிக்கப்பட்டன.

**அரிக்கமேடு**

தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில் அரிக்கமேடு பகுதியில் நடைபெற்ற ஆய்வுகள் குறித்தே பெருமளவில் தரவுகள் கிடைக்கப் பெறுகின்றன. அதற்கு வெளிநாட்டு தொல்லியல் ஆய்வாளர்களின் கவனம் அரிக்கமேட்டின் மீது திரும்பியது காரணமாகக் கூறப்படுகிறது. அதிக அளவில் வெளிநாட்டவர்கள் ஆய்வுச் செய்த இடமாகவும், அதிகத் தொல்லியல் நூல்களைத் தந்த ஆய்வுக் களமாகவும் அரிக்கமேடு திகழ்கிறது.

புதுச்சேரி அரியாங்குப்பம் அருகே இருக்கும் அரிக்கமேடு பகுதி வங்காள விரிகுடா கடலில் இருந்து 3 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. கி.மு 200 முதல் கி.பி 200 வரை இங்கு வாணிகம் நடந்ததற்கான ஆதாரங்கள் அகழாய்வு மூலம் கிடைத்துள்ளன. அதிலும் ரோமானியர்களுடான அரசன் அகஸ்டஸ் உருவம் பொறித்த நாணயங்கள், மணிகள், ரெடகோட்டா பொம்மைகள் போன்றவை கண்டெடுக் கப்பட்டதன் மூலம் ரோமானியர்களுடான வாணிபம் இப்பகுதியில் சிறந்து விளங்கியதை அறிய முடிகிறது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லெழாந்தீய் அரிக்கமேட்டின் சிறப்பை 1769-ல் நூலாக வெளியிட்டுள்ளார். 1908-ல் பிரெஞ்சு கல்லூரியின் பேராசிரியர் பூவோ துய்பராவ் அரிக்கமேட்டுப் பகுதியில் சிறுவர்கள் வைத்து விளையாடிய பல வண்ண மணிகள், மட்பாண்ட ஓடுகளைச் சேகரித்தார். துய்ப்ராவ் வேண்டுகோளின்படி 1939-இல் வியட்நாமில் இருந்து வந்த ஆய்வறிஞர் கொலுபேவ் ஆய்வின்பயனாக அகஸ்டஸின் தலை பொறிக்கப்பட்ட கோமேதகப் பதக்கமும் ஒரு புறம் யானை உருவமும் மறுபுறமும் சிங்கம் பொறிக்கப்பட்ட ரோமானிய நாணயங்களும் கிடைத்தன.

1944-இல் மார்ட்டின் வூதர் அரிக்க மேடு பகுதியில் ஈடுபட்டார். 1949-இல் கசால் என்பவர் அரிக்கமேட்டு உண்மைகளை பிரெஞ்சு மொழியில் நூலாக வெளியிட்டார். 1980-இல் ஆய்வு செய்த அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விமலா பெக்லி 1983-இல் கட்டுரை ஒன்றை வெளியட்டுள்ளார். இதில் அரிக்கமேட்டுப் பகுதியில் கிடைத்த சாயத்தொட்டி, உறைக்கிணறு, மதுச்சாடி, பிராமி எழுத்து அமைந்த பானை ஓடு போன்றவற்றையும், யவனக் குடியிருப்பின் சுவர்ப் பகுதிகளைப் பற்றியும் ஆராய்ந்து எழுதினர். இதன் விளைவாக விமலா பெக்லி தம் குழுவினருடன் உருவாக்கிய அரிக்கமேடுத் தொடர்பான இரண்டு நூல் தொகுதிகள் வெளிவந்துள்ளன.

அரிக்கமேட்டின் வரலாற்றை அறிந்து கொள்ள பிற நாட்டவர் அதிகம் ஆர்வம் காட்டியதை மேற்கூறிய அயல் நாட்டாரின் நூல்களும் கட்டுரைகளும் உறுதிப்படுத்துகின்றன. இது குறித்து ஆராய்ந்த தொல்லியல் வல்லுநர்கள் "அண்டை நாடுகளுடான கடல் வாணிபத்தில் அங்கம் வகித்த பல துறைமுகங்களின் தொடர்ச்சி யானதொரு துறைமுகமாக இந்த அரிக்கமேடு விளங்கியிருக்றிது". என்பதே வெளிநாட்டார் அரிக்கமேட்டின் மீது கவனம் செலுத்த காரணமாக அமைந்தது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இத்தகைய சிறப்புமிக்க இடத்தை, இந்திய தொல்லியல்துறை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும், தற்போதைய நவீன காலத்துக்கேற்ற அகழ்வாராய்ச்சிகள் ஏதும் இங்கு நடைபெறவில்லை. ஏற்கெனவே நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி இடங்கள் பாதுகாப்பு கருதி மூடப்பட்டுவிட்டன. அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டதற்கான அடையாளம் மட்டுமே இங்கு தென்படுகிறது. மேற்குறிப்பிட்ட வெளிநாட்டாரின் வருகையும், அவர்களது ஆய்வுக் குறிப்புகளும் அரிக்கமேடு எனும் கடற்சார்பகுதி உலகளாவிய வணிகத் தளமாக விளங்கியதை உறுதிப்படுத்தும் சான்றாக அமைகின்றன. (கே.கே. பிள்ளை தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் பக். 83 - 85)

**மதுரை**

வரலாற்றுக்கு மேற்பட்ட காலத்தி லிருந்து அண்மைக்காலம் வரையும் மதுரையும் அதனைச் சார்ந்த பகுதிகளும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக விளங்கியுள்ளன. மதுரையின் வரலாற்றுக்காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து அறியப்படுவதாகத் தொல்லியல் ஆய்வாளர்கள் கருகின்றனர். அசோக மன்னனின் கல்வெட்டுகளில் மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர் குலம் குறிப்பிடப் பட்டிருப்பதை அறிய முடிகிறது. மாங்குளம் வட்டம் மீனாட்சிபுரம் என்னும் ஊரில் காணப்படும் மலைக் குகைத்தளங்களில் பாண்டியன் நெடுஞ்செழியனை குறிப்பிடும் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. கி.மு மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்ப் பிராமி எழுத்துகள் பொறிக்கபட்ட கல்வெட்டுகளும் காணப் படுகின்றன. எனவே மதுரை மாநகரம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்தோ அதற்கு சற்று முன்பாகவோ அரசியல், வணிகம், சமயம் முதலிய பல்வேறு சிறப்பகளை பெற்ற நகரமாக உருவாகியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வர முடிகிறது. இத்தகு சிறப்பு வாய்ந்த மதுரை நகரத்திலும், அதனைச் சார்ந்த பகுதிகளிலும், நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் மதுரை வட்டத்தில் போதிய அளவு தொல்லியல் அகழாய்வு நடத்தப் படவில்லை என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்ததாக கூறப்படும் பண்பாட்டு சிறப்பு வாய்ந்த மதுரையின் அகப்பகுதியில் இதுவரை முறையான அகழாய்வு ஒரு முறைகூட நடத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. தமிழக அரசு மதுரையைச் சுற்றிய பகுதிகளில் அகழாய்வுகளை நடத்த முன்வந்தால் கி.மு. 3-ம் நூற்றாண்டுக்கு முந்தைய மதுரையைப் பற்றிய தடயங்களை கண்டடைய முடியும் என்று தொல்லியல் ஆய்வாளர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். தொல்லியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுவதைப் போன்றே மதுரைநகரைச்சுற்றியபகுதிகளில் அகழாய்வு மேற்கொண்டால, சங்க காலத்திற்கு முந்தைய காலத் தமிழர்கள் குறித்த வாழ்வியல் தடயங்கள் கிடைக்கப் பெறலாம் என்ற எதிர்பர்ப்பு வலாற்று ஆய்வாளர்களுக்கிடையே இருந்து வருவது,

மதுரையில் நடத்தப்பட வேண்டிய அகழாய்வின் முக்கியத்துவத்தை விளக்கு வனவாக அமைகின்றன. (வே. வேதாச்சலம் மதுரை என்னும் மாநகரம் பக். 42 - 43)

### கீழடி

சிவகங்கை மாவட்டம் திருபுவனத்திற்கு அருகில் உள்ள கீழடி என்னும் பகுதியில் மத்திய அரசின் தொல்லியல் துறை கடந்த இரண்டு ஆண்டுகளாக இரண்டு பிரிவுகளாக அகழாய்வினை நடத்தியது. “வைகை ஆற்று கலாச்சாரம்” நிலவிய பகுதி என்னும் இப்பகுதி ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகிறது. கீழடிப் பள்ளிச் சந்தை திடலில் காணப்படும் தொல்லியல் மேடு 110 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இதில் 50 சென்ட் நிலப்பரப்பில் நடந்த அகழாய்வு மூலம் ஏறக்குறைய கி.மு 1000-ல் தென்னிந்தியாவில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு போன்றவற்றை நிரூபிப்பதற்கான சான்று கள் கிடைத்துள்ளன. கீழடி ஆய்வில் தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட கருப்பு, சிவப்பு நிறங்களிலான சுமார் 1000 கிலோ எடை கொண்ட மண் ஓடுகளும் கிடைத்துள்ளன. கீழடியில் மேற்கொண்ட அகழாய்வின் மூலம் 3000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழரின் நாகரிகம் வெளிப் பட்டுள்ளது. அவர்கள் எழுத்து அறிவு பெற்றிருந்தும், தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கி இருந்ததும் கீழடி ஆய்வின் மூலம் தெரிய வருகிறது. இவ்வாய்வின் மூலம் அறியப்பட்ட நாகரிக காலத்தால் முந்தையது என்பதால் வட இந்தியாவில் கிடைக்கப்பட்ட முதல் நாகரிகமாக கருதப்படும் சிந்து சமவெளி நாகரிகத்துக்கு முந்தைய நாகரிகமாக தமிழர் நாகரிகம் விளங்கி இருப்பதை கீழடி அகழாய்வுகள் வாயிலாக உறுதிப்படுத்த முடிகிறது. **(ராஜாவேல், கீழடி ஆய்வும் சங்கத் தமிழர் வாழ்வும், ப.36)**

### முடிவுரை

ஒரு சமூகம் தன்னுடைய தொன்மையினை அறிந்துகொள்ள உதவும் நம்பத் தகுந்த துல்லிய ஆவணங்களைத் தருபவை யாக தொல்லியல் ஆய்வுகள் அமைகின்றன. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் நிகழ்த்தப்பட்ட, நிகழ்ந்துவரும் அகழ்வாய்வுகள் தமிழச்சமூகத்தின் தொன்மையினை உறுதிப்படுத்துகின்றன.